### இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட புரட்சியாளர்

# சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் புகழ் ஓங்குக!

## நினைவு நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, நவ. 29-

முன்னாள் பிரதமர், சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், “இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட புரட்சியாளர் எனவும் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக” என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.



மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**இந்திய வரலாற்றைப் புரட்டி போட்ட புரட்சியாளர் - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக!**

**உயர்கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் - தலைமைப் பொறுப்புகளிலும் நமது திறமையால் சாதனை படைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம்! சாதிக்கப் பிறந்தவர்களுக்குச் சாதி தடையில்லை என்பதை நிறுவுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பொற்கிழி - விளையாட்டு உபகரணங்கள் - திருநங்கைகளுக்கு நல உதவிகள் - கல்வி உதவித்தொகை - மூன்று சக்கர வாகனம்- சுழல்நிதி!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

சென்னை, நவ.29-

திமுக இளைஞரணி செயலாளர் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் தந்தை பெரியாருக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

அவருக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் மேளதாளம், கரகாட்டம், செண்டை மேளம் முழங்க பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் -1, உதயத்தால் எல்லாம் விடியும்! கழகத்தால் எதுவும் முடியும்! எனும் தலைப்பில் நலத்திட்டம் வழங்கும் விழா நேற்று முன்தினம் (27.11.2024, புதன் கிழமை) காலை 8.00 மணியளவில், சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை யில், க.வினோத் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று கழக மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்கினார்.

மேலும் 250 பள்ளி மாணவ- மாணவியருக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.13 ஆயிரம் மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்கள், 50 சுய உதவி குழுக்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பணம் மற்றும் புத்தாடைகள், 100 திருநங்கைகளுக்கு தலா ரூ.10 ஆயிரம், மாற்றுத்திறனாளிகள் 10 பேருக்கு மூன்று சக்கர வாகனங்கள் என 1335 பேருக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், வி.சுதாகர், சொ.வேலு, கே.எஸ்.இரவிச்சந்திரன், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, வே.உமா காந்த், சி.மகேஷ்குமார், பரிதிஇளம்சுருதி, ஐ.சி.எப்.முரளிதரன், ஏ.நாகராஜன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ். செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, கூ.பி.ஜெயின், வே.வாசு, சரிதா மகேஷ்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுதா தீனதயாளன் மற்றும் எழும்பூர் தெற்கு, வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள், மொய்தின், டால்பின்ஹரி, எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வட்ட கழக செயலாளர்கள், விஜயகுமார், ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறினர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; அ.தி.மு.க. ஆட்சியில், டெல்டா மாவட்டங்களை, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என அறிவித்து விட்டதாகத் தோள் தட்டிக் கொண்டார்களே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, அப்படி அறிவிப்பதற்கான எந்தவிதமான பரிந்துரையும், ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு வரவில்லை என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்துள்ளது.**

**இந்த அறிவிப்பின் மூலம் அ.தி.மு.க. ஆட்சியின் சாயம் வெளுத்துவிட்டது !**

**இது தொடர்பாக, ‘குற்றம் சுமத்துவது கேவலமான அரசியல்’ என்று அ.தி.மு.க. ஜெயக்குமார், பொங்கி வழிந்திருக்கிறார்.**

**அறியாமையான - கேவலமான ஆட்சியை நடத்திவிட்டு, கேவலமான அரசியல் என்று கோபம் கொப்பளிக்கக் குதிப்பது, மல்லாந்து படுத்துக்கொண்டு காறி உமிழ்வதற்கு ஒப்பானதுதானே !**

### திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவில்

# செல்போன் டவர்களின் திறனை அதிகரிக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை!

திருவண்ணாமலை, நவ.29-

பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலை யார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழா வரும் 4ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இந்த ஆண்டு தீபத்திரு விழாவில், 40 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிலையில், ஒவ்வொரு



ஆண்டும் தீபத் திருவிழாவின்போது, செல்போன் மற்றும் இணையதள சிக்னல் கிடைக்காமல் தவிப்பது வழக்கமா உள்ளது. ஒரே நேரத்தில் பல லட்சம் பக்தர்கள் செல்போனை உபயோகிப்பதால் இந்த நெருக்கடி ஏற்படுகிறது.

எனவே, இந்த ஆண்டு நெட்வொர்க் சிக்னல் பிரச்னை ஏற்படாமல் தடுக்க தற்போதுள்ள செல்போன் டவர்களின் திறனை மேம்படுத்த வேண் டும் என ஒன்றிய தகவல் தொடர்பு துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தி யாவிடம், திருவண்ணாமலை தொகுதி திமுக சி.என். அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, ஒன்றிய அமைச்சரிடம், அண்ணாதுரை எம்.பி. அளித்துள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது:

தென்னகத்தின் புகழ் பெற்ற ஆன்மிக தலம் திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயில். இங்கு நடைபெறும் கார்த்திகை தீபத்திருவிழாவில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். தென்னகத்தில் மிக அதிகமான எண்ணிக்கையில் பக்தர்கள் பங்கேற்கும் மிகப்பெரிய விழா கார்த்திகை தீபத்திரு விழாவாகும். லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலை நகரில் திரள்வதால், செல்போன் சிக்னல் கிடைக்காமல் பக்தர்கள் தவிக்கின்றனர். மேலும், இணையதள செயல்பாடும் பாதிக்கப்படுகிறது.

எனவே, இந்த ஆண்டு தீபத்திரு விழாவை முன்னிட்டு திருவண்ணாமலையில் உள்ள பிஎஸ்என் எல் மற்றும் தனியார் செல்போன் நிறுவனங்களின் செல்போன் டவர்களின் திறனை தற்காலிகமாக மேம்படுத்த வேண்டும்.

அதற்கான, தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அனுப்பி போர்க்கால அடிப்படையில் இந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதிக திறன் மிக்க தற்காலிக செல்போன் டவர்களை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். தீபத்திருவிழா தேரோட்டம் நடைபெறும் நாள் முதல் கார்த்திகை தீபத் திருவிழா முடிந்து பவுர்ணமி கிரிவலம் நிறைவடையும் வரை செல்போன் டவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. அன்பழகன்

**நவம்பர் 29 (2022)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**பேரூர் வார்டு செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**மேச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி சங்க தலைவராகவும், மேச்சேரி கூட்டுறவு பட்டு கூட்டுறவு சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கிருஷ்ணகிரி வருகைதரும் துணை முதல்வருக்கு

# ஓசூர் மாநகரக் கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாநகர செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. – மேயர் எஸ்.ஏ.சத்யா சிறப்புரை!

ஒசூர், நவ.29-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூரில் மாநகர செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத் திற்கு அவைத் தலைவர் செந்தில் குமார் தலைமை வகித்தார். மாநகர நிர்வாகிகள் கோபாலகிருஷ்ணன், ரவிக்குமார், சாந்தி, தியாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா மற்றும் மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் கலைஞரின் வழியில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உருவாக்க அனைத்து துறைகளிலும் நாள்தோறும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, மக்கள் கொண்டாடும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு இந்த கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது,

வரும் 05/12/2024 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு துணை முதல்வர் நம் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகையை யொட்டி மாநகர கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளரின் வழி காட்டுதலின் படி சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும் , அதில் பெருமளவில் கலந்து கொள்வது என்று தீர்மானிக்கப்படுகிறது.

மாவட்டக் கழகத்தின் ஆலோசனைப்படி மாநகர கழகத்தின் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள மாநகர அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களின் கழகப் பணி சிறக்க வாழ்த்துகளை இந்த கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அந்த பகுதியில் உள்ள கழக நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைமை கழகத்தின் வேண்டுகோளின்படி வாக்காளர் சேர்க்கை முகாமில் கலந்து கொண்டு அதிகளவில் வாக்காளர்களை சேர்க்க வேண்டும் என இந்த கூட்டம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

வார்டு கழக செயலாளர்கள் விடுபட்டுள்ள கழகப் பணிகளை விரைந்து முடிக்க கேட்டுக்கொள்கிறது. கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், மாவட்ட பொருளாளர் சுகுமாரன், பொதுக்குழு உறுப்பினர் தனலட்சுமி முன்னாள் நகர மன்ற தலைவர் குருசாமி,

பகுதி செயலாளர்கள் துணை மேயர் ஆனந்தையா, வெங்கடேஷ், ராமு, திம்மராஜ் அணிகளின் அமைப்பாளர்கள் சுமன், ராஜா, இக்ரம் அகமது, சக்திவேல் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர். மாநகர இளைஞரணி அமைப்பாளர் கலை செழியன் நன்றி கூறினார்.



திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே தாரை, தப்பட்டை முழங்க, கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. 48 கிலோ கேக் வெட்டி, பொதுமக்கள் 4800 பேருக்கு அறுசுவை உணவு விருந்து வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய துணை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி , பொருளாளர் கதிரவன்,பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கனவான அந்தியூர் பெரிய ஏரியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் 50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட படகு இல்லத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாவட்ட சார் ஆட்சியர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர், அந்தியூர் தொகுதி பார்வையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நீர்வளத் துறை அதிகாரிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.